இடைக்கோடு பேரூராட்சி அலுவலகம்

ந.க.எண்.242 /2022/அ1 நாள்.27.06.2022

<u>**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**</u>

இடைக்கோடு முதல் நிலை பேரூராட்சியில் 2022-2023-ம் நிதியாண்டில் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் தினசரி குப்பைகள் சேகரம் மற்றும் உரம் தயாரிப்பு உள்ளிட்ட திடக்கழிவு மேலாண்மை திட்ட செயலாக்க பணிகளுக்கு 17 **நபர்களும், மேற்பார்வை பணிக்கு 1 நபரும், திடக்கழிவு வாகன ஒட்டுநர் பணிக்கு 1 நபர்களும், தெருமின் விளக்கு பராமரிப்பு பணிக்கு 2** நபர்களும், **குடிநீர் விநியோகப்பராமரிப்பு** பணிக்கு 5 நபர்களுக்கு **கணினி இயக்குபவர் 1** நபரும் சேர்த்து மொத்தம்27 நபர்களும் அயலாக்க முறையில் (Outsourcing) மனித ஆற்றல் வழங்கிட பதிவு பெற்ற சுய உதவிக்குழுக்கள் / சங்கங்கள் / நிறுவனங்களிடமிருந்து இரு உறை (2 cover system) முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் **15.07.2022 வெள்ளிக்கிழமை** அன்று பிற்பகல் 3.00 மணி வரை வரவேற்கப்படுகிறது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு ஆஜராகி இருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் மன்ற அங்கீகாரத்திற்குட்பட்டு ஏற்றுக் கொள்ளப்படும். இதற்கான ஒப்பந்த நமூனா **14.07.2022 வியாழக்கிழமை** அன்று பிற்பகல் 5.00 மணி வரை ரூ. 1680/- செலுத்தி இடைக்கோடு முதல் நிலை பேரூராட்சி அலுவலகத்தில் ரசீது பெற்றுக் கொள்ளலாம். **https://tntenders.gov.in மற்றும் http://tenders.tn.gov.in** என்ற இணையதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். வைப்புத்தொகை (Earnest Money Deposit) ரூ.80000/-ம், செயலாக்கக் கட்டணம் (Processing Fees) ரூ.1000/-ம் தனித்தனியாக **செயல் அலுவலர், இடைக்கோடு முதல் நிலை பேரூராட்சி (Executive Officer, Edaicode Town Panchayat)** என்ற பெயரில் வங்கியில் மாற்றத்தக்க வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து இணைக்கப்பட வேண்டும்.

<u>**சிறப்பு நிபந்தனைகள்**</u> :-

1. ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டு உறையில் (Two Covers) பெறப்பட வேண்டும் (Cover 1)
   உறை -1ல் Form 1-Covering letter for submission of bid documents along with the experience
   details indicated in Annexure II. வழங்கப்பட வேண்டும்.
   (Cover - 2) உறை -2 ல் Financial proposal (Annexure III)
2. மனித ஆற்றலை வழங்கும் நிறுவனம் குறைந்தபட்சம் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மனித ஆற்றலை மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக வழங்கிய அனுபவ சான்று இணைக்கப்பட வேண்டும்.
3. வருடாந்திர பணபரிவர்த்தனை (Annual Turn over) கடந்த மூன்று நிதி ஆண்டுகளுக்கு ரூ.50.00 இலட்சத்திற்கு மேல் இருக்க வேண்டும். அதற்கான சான்று இணைக்கப்பட வேண்டும்.
4. மாவட்ட ஆட்சித்தலைவரால் வழங்கப்பட்ட அடிப்படை ஊதியம் ரூ. 614/- ல் எவ்வித மாற்றமும் செய்யக்கூடாது. மேற்படி தொகையில் 10% மிகையாகாமல் சேவைக்கட்டணம் (Service charges) கோரப்பட வேண்டும்.

5. ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் மதிப்பீடு செய்யப்பட்டு தொழில்நுட்ப தகுதி பெற்ற நிறுவனத்தின் (Price Bid) மட்டும் திறக்கப்பட்டு குறைந்த நிரக்கில் சமர்ப்பித்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மன்ற அங்கீகாரம் பெற்று வேலை உத்தரவு வழங்கப்படும்.
6. பணி உத்தரவு கிடைக்கப்பெற்ற சுய உதவிக்குழு / நிறுவனம் / சங்கம் அனைத்து நிபந்தனைகளையும் ஏற்று ரூ.50/- க்கான முத்திரை பத்திரத்தில் செயல் அலுவலருடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.
7. பணி செய்கின்ற நாட்களுக்கான தொகை ஒவ்வொரு மாதமும் கணக்கிட்டு ECS மூலம் வழங்கப்படும். பணியாளர்களுக்கு ஒப்பந்த சுய உதவிக்குழு / சங்கம் / நிறுவனம் மூலம் ECS மூலமே தொகை வழங்கப்பட வேண்டும்.
8. மாதம் தோறும் ஒப்பந்ததொகை கோரும்போது பணியாளர்களின் ஊதியத்தில் அரசு விதிகளின் படி பிடித்தம் செய்யப்பட்ட ESI, EPF தொகை ஒவ்வொரு மாதம் 10-ம் தேதிக்குள் செலுத்திய அவர்களின் வங்கி பாஸ் புத்தக நகல் ஆவணத்துடன் கேட்பு சமர்ப்பித்தால் மட்டுமே தொகை வழங்கப்படும்.
9. பேரூராட்சியில் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளி நமூனாவில் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வேண்டும்.
10. சுய உதவிக்குழு சங்கம் / நிறுவனம் மூலம் பணிகள் செய்வதை கொண்டு எவ்வித முன்னுரிமையும் கோர இயலாது. இந்நிகழ்வுகள் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு செல்லத்தக்கது அல்ல.
11. தங்களது சுய உதவி குழு நிறுவனம் மூலம் அனுப்பப்படும் நபர்களுக்கு தனியாக வருகை பதிவேடு பராமரித்து கண்காணிக்கப்படும். வேலைகளுக்கு வந்த நாட்களுக்கு மட்டுமே ஊதியம் வழங்கப்படும்.
12. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட வேண்டும்.
13. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால் அடுத்த வேலை நாட்களில் அந்த ஒப்பந்தப்புள்ளி பெற்றுக் கொள்ளப்படும்.
14. ஒப்பந்தப்புள்ளியினை நிர்வாக காரணங்களின் அடிப்படையில் நிறுத்தி வைக்கவோ, நிராகரிக்கவோ அல்லது ஒத்தி வைக்கவோ செயல் அலுவலருக்கு முழு அதிகாரமுண்டு.
15. ஒப்பந்தக்காலம் 2022 – 2023 ம் நிதியாண்டு 31.03.2023 வரை செல்லத்தக்கது.
16. கூடுதல் விவரம் அறிய விரும்புவோர் அலுவலக வேலைநாட்களில் அலுவலகத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்

செயல் அலுவலர்

இடைக்கோடு முதல் நிலை பேரூராட்சி

**<u>பெறுநர்</u> :-** முன் ஒப்பந்ததாரர்கள்

**<u>நகல்</u> :** –

1. உதவி இயக்குநர் , பேரூராட்சிகள் நாகர்கோவில் மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. அலுவலக விளம்பர பலகை.